Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 30, 2024

செவ்வாய்க்கிழமை ஜனவரி 30, 2024 | ஒளி: 10 கதிர் 182 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# வவுச்சருக்கு திகதி நீடிப்பு

பாடசாலை மாணவர்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பாதணிகளுக்கான வவுச்சர்கள் செல்லுபடியாகும் காலம் 17.02.2024 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பெப்ரவரி முதலாம் திகதி வரை மட்டுமே செல்லுப்படியாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

# “2025இல் சொத்து வரி”



எதிர்காலத்தில் மறைமுக வரிகளை அறிமுகப்படுத்தவோ அல்லது வரி சதவீதத்தை அதிகரிக்கவோ அரசாங்கத்துக்கு எண்ணம் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

எனவே, மறைமுக வரி விதிப்பால் பொருட்களின் விலை உயராது என்றும், பொருட்களின் தேவை மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் பொருட்களின் விலை நிர்ணயிக்கப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் கூறினார்.

கேகாலையில் திங்கட்கிழமை (29) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டார். இதேவேளை, 2025ஆம் ஆண்டு புதிய சொத்து வரி அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். சொத்து வரி என்பது நேரடி வரி என்றும், அதிக சொத்து வைத்திருப்பவர்களிடம் இந்த வரி வசூலிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



# தாய்லாந்து பிரதமர் வருகிறார்

தாய்லாந்து பிரதமர் ஷ்ரெத்தா தவிசின் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வருகைதரவுள்ள அவர், இலங்கையின் 76ஆவது சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாகப் பங்கேற்பார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகைதரும் அவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார். அத்துடன் இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைக் கைச்சாத்திடும் நிகழ்விலும் பங்கேற்பார்.


# 10 மாவட்டங்களில் “மலைப் பத்தாண்டு”



“மலைப் பத்தாண்டு” 10 ஆண்டு பல்நோக்கு கிராமப்புற மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டம் மாவட்ட அளவில் முன்மொழிவுகளைப் பெறத் தொடங்குகியுள்ளது.

மலைப் பத்தாண்டு வேலைத்திட்டம் இந்த வருடம் 10 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, களுத்துறை, பதுளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே முன்னெடுக்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2




பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, திங்கட்கிழமை (29) பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

# கொழும்பில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம்

நாட்டு மக்கள் மீதான பொருளாதார அழுத்தத்தைக் குறைத்து, அவர்கள் சுதந்திரமாக வாழ அனுமதிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கொழும்பில் ஜனவரி 30 ஆம் திகதி (இன்று) பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பகிடிவதை விவகாரம் நால்வருக்கு பிணை

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் திங்கட்கிழமை (29) ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.


அந்தப் பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் மற்றும் மொழிக் கல்வி பீடத்தின் நான்காம் வருடத்தில் கல்வி கற்றுவரும் 23, 24 மற்றும் 25 வயதுடைய மாணவர்கள் குழுவொன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# “பயங்கரவாதி யார்? வரைவிலக்கணம் இல்லை”



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ்,முடிவுகளை எடுக்கும் உரிமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நியமனம் ஒர் அரசியல் நியமனமாகும். “பயங்கரவாதி” யார் என்ற வார்த்தை சட்டத்தில் சரியாக வரைவிலக்கணப்படுத்தப்படவில்லை. என்று பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





# செல்லக்கதிர்காமம் விபத்தில் இருவர் பலி; நால்வர் காயம்

செல்லக்கதிர்காமம்- கதிர்காமம் வீதியில், ஞாயிற்றுக்கிழமை (28) இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் பலியானதுடன் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர் என கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# மாவனெல்லையில் 30 கடைகள் கருகின

மாவனெல்ல நகரின் பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (28) இரவு திடீரென ஏற்பட்ட தீ விபத்தில், சுமார் 30 கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

தொடர்ச்சி P2



## மன்னார் வைத்தியசாலையில்

# பொலித்தீனுக்கு தடை

ரொசேரியன் லெம்பட்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலை வளாகத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை சூழல் மற்றும் பொது இடங்களில் அதிகரித்து வரும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையால் சூழல் மாசடைவதையும் அதேநேரம், மழைக் காலங்களில் சிதறிக் கிடக்கும் பொலித்தீன் பைகளில் இருந்து டெங்கு நுளம்பு பரவல் அதிகரித்துக் காணப்படுவதால் மன்னார் வைத்தியசாலையில் முதல் கட்டமாக பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# தொங்கிய நிலையில் மனித எலும்புக்கூடு மீட்பு

மரமொன்றில் தொங்கிக்கொண்டிருந்த நிலையில் மனித எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டுள்ளது.

பதுளை கொஹோவில கிரிகல்பொத்த காட்டில் தூக்கில் தொங்கியதாகச் சந்தேகிக்கப்படும் நபரின் உடல் பாகங்கள் ஞாயிற்றுக்கிழமை (28) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக கந்தேகெதர பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "2025இல் சொத்து வரி"



பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் வகையில் எந்தவொரு புதிய மறைமுக வரியையும் அமுல்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போதைய வரி வீதத்தை மேலும் அதிகரிப்பதற்கு அரசுக்கு எந்த எண்ணமும் இல்லை. நாங்கள் அரச வருவாயை அதிகரிக்கும் வகையில் செயற்பட்டு வருகிறோம் என்றார்.

இதன் விளைவாக மறைமுக வரிகளின் சதவீதத்தைக் குறைத்து, மக்கள் மீதான சுமையைக் குறைக்க முடியும். எனினும் 2025 இல் புதிய சொத்து வரி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பரிந்துரைகளுக்கு இணங்க உரிய வரி விதிக்கப்படும் அதே வேளையில், இந்த வரியானது முற்போக்கான வரியாக இருக்கும்.இந்த வரி அதிகளவு சொத்து வைத்திருப்பவர்களுக்கு விதிக்கப்படும் என்றார்.

# கொழும்பில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம்

அரசை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தை ஆரம்பிப்போம். நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்படும் போது மக்களின் சுதந்திரத்திற்காக ஐக்கிய மக்கள் சக்தி போராடத் தயாராக உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உட்பட பல பிரச்சினைகளை முன்னிறுத்தி அரசாங்கத்துக்கு எதிராக இந்த போராட்டம் முன்னெக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்துள்ளார்,

போராட்டம் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# 10 மாவட்டங்களில் "மலைப் பத்தாண்டு"

இந்த 10 மாவட்டங்களின் 89 பிரதேச செயலகப் பிரிவுகளில் 4,498 கிராம உத்தியோகத்தர்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்காக கடல் மட்டத்திலிருந்து 200 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டத்துக்கான திட்ட முன்மொழிவுகள் பிரதேச மட்டத்தில் தயாரிக்கப்பட்டு இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலாளர் குழுக்களின் பரிந்துரையுடன் மாவட்ட குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், , மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் மலைப் பத்தாண்டு அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். மாத்தறை மாவட்ட செயலகத்தில் இது நடைபெற்றது.

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிபுன ரணவக்க மற்றும் தென் மாகாண ஆளுநர் கலாநிதி வில்லியம் கமகே தலைமையில் நடைபெற்றது.

மாத்தறை மாவட்டத்தின் 05 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 214 கிராம அலுவலகர் பிரிவுகளிலும் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதாக அமைச்சர் இங்கு உரையாற்றினார். அக்குரஸ்ஸ, பிடபெத்தர, முலட்டியான, பஸ்கொட மற்றும் கொட்டபொல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளாகும்.

கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வருவதாக தெரிவித்த அமைச்சர், மக்களின் பங்களிப்புக்கு முன்னுரிமை அளித்து இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்திற்கான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வருடம் மாத்தறை மாவட்டத்திற்கு அபிவிருத்தி நிதியின் கீழ் 402 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் மலைப் பிரதேசங்களில் வாழும் மக்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மலைப் பத்தாண்டு எனப்படும் பத்தாண்டு கால பல்நோக்கு கிராமப்புற மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 10,000 மில்லியன் ரூபாவாகும். இதன் கீழ் ஒரு பிரதேச செயலகத்திற்கு தலா 100 மில்லியன் ரூபாயட கிடைக்கும்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 10 முக்கிய அபிவிருத்திப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதாவது வாழ்வாதாரம், சந்தை அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத் துறை மேம்பாடு, கல்வி, குடிநீர் வசதி, விவசாயம் மற்றும் சிறு நீர்ப்பாசனம், மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்கவை, தொலைபேசி மற்றும் இணையம், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் முகாமைத்துவம் மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துதல். மலைப் பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்ட சமூகங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு விரைவான மற்றும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்வதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்திற்கு மாவட்ட மற்றும் பிரதேசக் குழுக்களின் உடன்பாடு கிடைத்ததும், மாவட்டச் செயலாளர்களின் முழு ஈடுபாட்டுடனும், இதர அரசு நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் முழு ஆதரவுடனும் கூட்டுத் திட்டமாக செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தை ஜனாதிபதி அலுவலகம், நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சும் மேற்பார்வை செய்கிறது.

# "பயங்கரவாதி யார்? வரைவிலக்கணம் இல்லை"

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாகும். இச்சட்டத்தின் கீழ்,நீதிமன்றத்தின் அனுமதியின்றி யாரையும் கைது செய்து எந்தக் காலத்திற்கும் தடுப்புக் காவலில் வைக்கலாம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (29) நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வாழ்வாதார நெருக்கடி, தொழில் பாதுகாப்பின்மை நெருக்கடி என பல நெருக்கடிகளை நாட்டு மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம், எரிபொருள் விலை உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. உழைக்கும் மக்களின் கூலி அவர்கள் வாழ்வதற்குப் போதாது. மக்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை, வாழ்க்கைச் செலவு தான் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. நாட்டில் பொருட்களின் விலை 20 முதல் 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. ஆனால், மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை.

அரசாங்கத்திற்கு எதிராக யார் பேசினாலும் நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் ஊடாக கைது செய்யலாம்.தேர்தல்கள் இடம்பெறவுள்ள வருடத்தில், மக்களை ஒடுக்குவதற்காக இந்த பிற்போக்கு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்களை ஒடுக்கித் தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையில் தான் அரசாங்கம் இந்த சட்ட மூலத்தைக் கொண்டு வந்துள்ளது என்றார்.

நீதித்துறையின் அதிகாரங்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து பேர் கொண்ட ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழு ஓர் அரசியல் ஆணைக்குழுவாகும். ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் சுயாதீன ஆணைக்குழுக்கள் அல்ல. இந்த ஆணைக்குழுவே அபராதமும், தண்டனையும் வழங்கும். இச்சட்டத்தின் மூலம் மக்களின் ஜனநாயக சுதந்திரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டங்கள் அனைத்தும் மக்களைக் கட்டுப்படுத்தி மக்கள் குரலை முடக்கவே கொண்டு வரப்பட்டுள்ளன என்றார்.

நிகழ்நிலை காப்பு சட்டத்தின் 57 பிரிவுகளில் 32 பிரிவுகளில் திருத்தம் செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உயர் நீதிமன்ற தீர்ப்பை சபாநாயகரும் அரசாங்கமும் புறக்கணித்து இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு முன் நாட்டிலிருந்த சபாநாயகர்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டனர். தற்போதைய சபாநாயகர் உயர் நீதிமன்ற தீர்ப்பைப் புறக்கணித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பரிசீலிக்கப்படவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்குமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் அதை அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை என்றார்.

அத்துடன், நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்பினர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த அரசாங்கம் இதை கூட கருத்திற் கொள்ளவில்லை. இன்னும் நாட்டை ஆண்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

# மாவனெல்லையில் 30 கடைகள் கருகின

விரைந்து செயல்பட்ட பொலிஸார், மாவனெல்ல பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவு மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பழங்கள், நகைகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் விற்பனை செய்யும் கடைகள் பல இந்த தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்பதுடன், மாவனெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# செல்லக்கதிர்காமம் விபத்தில்...

செல்லக்கதிர்காமத்தில் இருந்து கதிர்காமம் வரையிலும் பயணித்த வேன், பஸ்ஸரயாய சந்தியில், வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போக, வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதியதுடன், முன்பாக வந்துகொண்டிருந்த இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான டிரக்டரில் மோதுண்டு, வீதியைவிட்டு விலகி, புளியமரத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

அந்த சந்தர்ப்பத்தில் அந்த வேனில் இளைஞர்கள் அறுவர் இருந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கதிர்காமம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் ஒரு இளைஞன் மரணமடைந்தார். இதேவேளை, படுகாயமடைந்த நிலையில், ஹம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட மற்றுமோர் இளைஞனும் மரணமடைந்தார்.

செல்லக்கதிர்காமத்தை வசிப்பிடமாகக் கொண்ட 24 வயதான இளைஞர்கள் இருவரே மரணமடைந்துள்ளனர் எனத் தெரிவித்த கதிர்காமம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# தொங்கிய நிலையில்...

கழுத்தை நெரித்து இறந்ததாக சந்தேகிக்கப்படும் 40 வயதுடைய நபர், சொரனாதோட்டை, கெடிகஹதன்ன, கொஹோவிலவில் வசிக்கும் தினேஷ் ரத்நாயக்க என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 28ஆம் திகதி மதியம் அந்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் காட்டுப்பகுதிக்குள் சென்ற போது மரத்தில் சடலம் ஒன்றின் பாகங்கள் தூக்கில் தொங்குவதைக் கண்டு கந்தேகெதர பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர் கடந்த செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி வேலைக்குச் செல்வதாகக் கூறி துணிப்பையுடன் வீட்டை விட்டு வெளியே சென்றதாகவும் அதன் பிறகு குடும்பத்தினரிடம் இருந்து எந்த தகவலும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் துணிகளைக் காய வைப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த கம்பியின் ஒரு பகுதியே கழுத்தை நெரிப்பதற்கு பயன்படுத்தியமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த உடல் உறுப்புகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் நீதவான் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக நீதிமன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலித்தீனுக்கு தடை

குறிப்பாக, சிகிச்சைக்காக வருபவர்கள், நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக உக்கக் கூடிய அல்லது மீளப் பயன்படுத்தக்கூடிய பைகளைக் கொண்டு வருமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதே நேரம் பொலித்தீன் பைகளுடன் வருபவர்களிடம் இருந்து பொலித்தீன் பைகள் வாங்கப்பட்டு மாற்றீட்டு பைகள் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் தற்காலிகமாக வழங்கி வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சுதந்திர தினம் தமிழர்களுக்கு கரிநாள்: கவனயீர்ப்பு பேரணிக்கு அழைப்பு

வ.சக்தி

இலங்கையின் சுதந்திர தினம், தமிழர்களுக்கு கரிநாள் என தெரிவித்துள்ள மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கம் சார்பாக அச்சங்கத்தைச் சேர்ந்த ஆமலநாயகி அமல்ராஜ் அன்றையதினம் கவனயீர்ப்பு பேரணியை முன்னெடுக்க அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி, இலங்கை அரசாங்கம் தனது சுதந்திர தினத்தினை கொண்டாடுகின்றது. இலங்கையின் ஆட்சியானது, காலனித்துவ ஆட்சியால், 1948 மாசி 4ஆம் திகதி சிங்கள ஆதிக்க அரசியல்வாதிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டதில் இருந்து தமிழர்கள் மற்றுமொரு சிங்கள ஆதிக்க சக்தியின் கீழ் அடிமையாக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் தமிழர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்பட்டார்கள். தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டதுடன், அவர்களைத் தேடி நீதி கோரும் அவர்களது உறவுகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் மட்டுமல்ல, தமிழ் அரசியல் தலைவர்களும், நீதிபதிகளும் கூட அச்சுறுத்தப்படுகின்றனர், தாக்கப்படுகின்றனர், உள்நாட்டில் நீதி மறுக்கப்பட்டது.

இவ்வாறு அடிமையாக வாழும் தமிழ் மக்கள், இலங்கையின் சுதந்திர தினத்தினை கரிநாளாக அனுஷ்டித்துவருகின்றோம்.

கல்லடிப்பாலத்திலிருந்து காந்திப்பூங்காவரை கவனயீர்ப்பு பேரணி ஒன்றை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து எதிர்வரும் 04 பெப்ரவரி 2024 அன்று காலை 10 மணியளவில் ஏற்பாடு செய்துள்ளோம். இப்பேரணியில் கலந்து கொண்டு தமிழரின் அபிலாசைகளையும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவோம் அனைவரும் வாரீர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய தலைவரின் நடவடிக்கைகள் தொடர்பில்

# “கல்முனை கிளை திருப்தி”

பாறுக் ஷிஹான்

தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு சிறந்த காத்திரமான முடிவுகளை நடைமுறைப் படுத்தவுள்ளதாக அக்கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் ஶ்ரீதரன் தெரிவித்ததன் மூலம், புதிய உத்வேகத்தோடு கட்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென கல்முனைத் தொகுதிக் கிளை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகக் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வாழ்த்து தெரிவித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே கல்முனை கிளையினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தலைவர் தெரிவின் பின்னர் இடம்பெற்ற பொதுச்சபை கூட்டத்தில் அவர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் கட்சியின் ஏனைய பதவிகள் தொடர்பில் மத்தியக் குழுவின் தீர்மானங்கள் என்பவை தொடர்பாகவும் அவ்வறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக எமது மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உபதலைவர் பதவிக்காக முன்மொழியப்பட்டமையானது அம்பாறையில் கட்சிக்கு புதிய இரத்தம் பாய்ச்சியதாக அமைந்திருக்கின்றது. பல தசாப்த காலமாக உயர் பதவிகள் கட்சியின் சார்பில் எமது மாவட்டத்துக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இம்முறை அவ்வாறு ஒரு பதவி வழங்கி இருப்பதானது கட்சி தொண்டர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்காகத் தொகுதிக் கிளை சார்பில் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேபோன்று தலைவர் தெரிவில் தமக்காக பரப்புரையில் ஈடுபட்ட சிலர் உயர் பதவிகளுக்காக சிபார்சு செய்யப்பட்டபோதிலும் கட்சியின் நலன், சமநிலை தன்மையைப் பேணல் என்பவற்றின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டமையானது கட்சி எதிர்காலத்தில் பாரபட்சமற்று பயணிக்கும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் கட்சியினால் எடுக்கப்படவுள்ள அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமது பூரண ஒத்துழைப்பைத் தொகுதிக் கிளை சார்பிலும், அம்பாறை மாவட்டம் சார்பிலும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நால்வருக்கு கௌரவப் பட்டம்

ஆ.ரமேஸ்.

வலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு ‘தேசமான்ய’, ‘தேசகீர்த்தி’,‘சிறீலங்காமான்ய’ மற்றும் ‘தேசபந்து’ என்ற கௌரவப் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

“வாழும்போதே வாழ்த்துவோம்” என்ற தொனியில், ஶ்ரீ சக்தி ஆன்மீக இந்து அமைப்பு ஏற்பாட்டில் மாத்தளை - மஹாத்மா காந்தி மண்டபத்தில் சனிக்கிழமை (27) இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளதுடன், அவர்களுக்குப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஹைபொரஸ்ட் வ/அருணோதயா இந்துக் கல்லூரியின் அதிபர் மு.டயஸ்குமார், உடப்புஸ்ஸலாவை சென் மார்க்ரட் ஶ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பிரமகுரு சிவஶ்ரீ த.தேவேந்திரன் குருக்கள், ஆசிரியர் ஆலோசகர் சா.ரகுநாதன் மற்றும் வர்த்தகர் சி.மகேந்திரன் ஆகிய நால்வர் கௌரவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# படகை செலுத்திய தந்தை; கதறிய பிள்ளைகள்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் ஆபத்தான படகு பயணத்தில் ஈடுபட்டிருந்த இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவரை சனிக்கிழமை (27) கடற்படையினர் காப்பாற்றி கரை சேர்த்துள்ளனர்.

மயிலிட்டி கடல் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தனது 2 வயது பிள்ளையையும், தனது சகோதரியின் 7 வயது மகளையும் படகில் ஏற்றி கடலில் ஆபத்தான முறையில் படகைச் செலுத்தியுள்ளார். இதன்போது, படகுக்குள் கடல் நீர் உட்புகுந்ததுடன், படகில் இருந்த பிள்ளைகளும் பயத்தில் கத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தைக் கடலில் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கவனித்துள்ளனர்.

இதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்து, படகில் இருந்து பிள்ளைகளை மீட்டுள்ளதுடன், படகினை கரைக்குச் செலுத்தியதன் பின்னர் குடும்பஸ்தரைக் கடுமையாக எச்சரித்துள்ளனர்.

இச்சம்பவத்தின்போது படகோட்டிய குடும்பஸ்தர் மது போதையில் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# திருட்டு சம்பவத்தில் ஒருவர் கைது

பாறுக் ஷிஹான்



சுமார் 8 இலட்சம் பெறுமதியான "Bajaj pulsar Ns 200" என்ற வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளை திருடி சென்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஞாயிற்றுக்கிழமை (28) ஒருவர் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனவரி 14ஆம் திகதியன்று சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய, சம்மாந்துறை பொலிஸாரால் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், அக்கரைப்பற்று பிரதேசத்திலிருந்து குறித்த மோட்டார் சைக்கிளை கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) மீட்டுள்ளதுடன், திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆடை தொழிற்சாலை ஆரம்பித்து வைப்பு

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் ஸ்தாபக தலைவர் ஆர்.ரமேஸ்வரன் தலைமையில், தோட்டப்புற இளைஞர்களின் சுயத்தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில், “வாழ்க்கைக்கு கரம் கொடுப்போம்” எனும் தொனிப்பொருளில் 1200ஆவது வேலைத்திட்டமாக ஆடை தொழிற்சாலையொன்றை இரத்தினபுரி வெவல்கட்டிய பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மதத்தலைவர்கள், பிரதேச சுகாதார ஆலோசகர், இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், தோட்ட நிர்வாக உறுப்பினர்கள், பயனாளர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வாளர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.






றொசேரியன் லெம்பட்

மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கு, இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த மாவட்ட செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.ஹலிம்தீன் மன்னார் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக, மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரனின் முன்னிலையில் தனது கடமைகளை திங்கட்கிழமை (29) பொறுப்பேற்றுள்ளார்.

இதன்போது, மேலதிக மாவட்டச் செயலாளர்கள் (நிர்வாகம் மற்றும் காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர் மற்றும் திட்டமிடல் கிளையின் அனைத்து உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

# 16ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா




எம்.எஸ்.எம்.ஹனீபா

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 16ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் பெப்ரவரி மாதம் சனிக்கிழமை (10) ஞாயிற்றுக்கிழமை (11) இரண்டு நாட்களும் நடைபெறவுள்ளதாக, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர், திங்கட்கிழமை (29) தெரிவித்துள்ளார்.

மேலும், தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் இரண்டு நாட்களும் தலா 3 அமர்வுகளாக மொத்தமாக ஆறு அமர்வுகளாக இந்த பட்டமளிப்பு நடைபெறவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது நாளின், முதலாவது அமர்வில், கலை கலாசார பீடத்தினைச் சேர்ந்த 342 மாணவர்களும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமியக் கற்கைகள் அரபு மொழி பீடங்களைச் சேர்ந்த 355 மாணவர்களும் ,மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை(11) நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 314 பட்டதாரிகளும், ஐந்தாவது அமர்வில் கலை கலாசார பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 350 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளது.

ஆறாவது அமர்வில் கலை கலாசார மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி பட்டதாரிகள் 361 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் 1414 உள்வாரி பட்டதாரிகளும், 711 வெளிவாரி பட்டதாரிகளுக்குமாக மொத்தம் 2152 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நியமனம்

வி.ரி. சகாதேவராஜா

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி திறன் விருத்தி, மகளிர் அபிவிருத்தி, நீர் விநியோகத்துறை அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி கலாநிதி மூ.கோபாலரத்தினம் (மூகோ) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் மேற்கொண்ட அதிரடி உயர் நிர்வாக மாற்றத்தில் ஓரங்கமாக இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது.



# கடற்றொழிலுக்கு சென்ற இளைஞன் மாயம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற 32 வயதுடைய ஜோசப் மக்சிமஸ் சுரேஷ்குமார் என்பவர் காணாமல் போயுள்ளார்.

சம்பவத்தன்று குறித்த இளைஞன் மேலும் இருவருடன், குருநகரில் இருந்து படகில் கடற்றொழிலுக்கு சென்று படகில் தங்கி தொழிலில் ஈடுபட்ட நிலையில், இரவு மூவரும் படகினுள் நித்திரைக்கு சென்றுள்ளனர். காலையில் எழுந்து பார்த்தபோது, இளைஞனை காணவில்லை எனவும், இளைஞனை காணாத நிலையில், கரை திரும்பி ஏனைய கடற்றொழிலாளர்களுக்கும் அறிவித்து, மேலதிக படகுகளுடன் கடலுக்கு சென்று தேடுதல் நடத்தியும் இளைஞனை காணவில்லை எனவும் அவ்விரு இளைஞர்களும் தெரிவித்துள்ளனர்.

இளைஞன் காணாமல்போன விடயம் தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறை, பொலிஸார் மற்றும் கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பண்புகளை இழக்கும் பகிடிவதைகள் இனியும் வேண்டாம்

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களிடையே உள்ள கூச்ச சுபாவத்தைப் போக்குவதற்காகவும் மாணவர்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வினைப் போக்கி, அவர்களிடையே ஒரு சுமூகமான நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கும், பொறாமை போன்ற அற்ப உளப் பிரச்சினைகளைப் போக்குவதற்குமே, அந்தக் காலத்தில் பல்கலைக்கழகங்களில் 'ராக்கிங்' செய்யப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக 1997இல் இணைந்த செல்வநாயகம் வரப்பிரகாஷ் என்ற மாணவன், பகிடிவதைக்கு உள்ளான நிலையில் உயிரிழந்தான். அங்கிருந்த சிரேஷ்ட மாணவர்களால் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போட வைக்கப்பட்டான். இதனால், அவனது சிறுநீரகங்கள் சிதைக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்தான்.

பகிடிவதையால் பாதிக்கப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வரப்பிரகாஷ், 'நான் இனி பல்கலைக்கழகம் போகாமல் இருந்து விடுகிறேன். அவர்களைத் தண்டிக்க வேண்டாம். மன்னித்து விட்டுவிடுங்கள்' என்று கோரியிருந்தான். தன்னுடலுக்கு இன்னல்களை ஏற்படுத்தியவர்களுக்கு மன்னிப்பளித்த அந்த வரப்பிரகாஷ், இன்னுயிரை இழந்தான்.

வரப்பிரகாஷுக்கு பகிடிவதையை வழங்கிய மாணவன், பொலிஸாரால் இனங்காணப்பட்ட நிலையில், அவனுக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டது. இந்த வழக்கின் தீர்ப்பு, கண்டி மேல் நீதிமன்றத்தினால், 2014 ஜூலை மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

இதன்போது, குற்றவாளியாக இனங்காணப்பட்ட மாணவனுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. இருப்பினும், வழக்கு விசாரணைகளுக்காக சந்தேகநபர், நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. அச்சந்தேகநபர் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்று விட்டதாகப் பொலிஸார் அறிவித்தனர். இதனால், அவருக்கு எதிராகப் பகிரங்க பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், இதுவரையில் அவர் சிக்கியதாகத் தெரியவில்லை.

பகிடிவதை என்பது, சிரேஷ்ட மாணவர்களால் புதிய மாணவர்கள் மீது திணிக்கப்படும் உடல், உள ரீதியான துன்புறுத்தலாகும். ஆரம்பக் காலத்தில், புதியவர்களுடன் நட்பை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பகிடிவதை, பிற்காலத்தில் வன்முறைச் செயல்களுக்கும் குற்றங்களுக்கும்.

நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் தெரிந்தும் தெரியாமலும் புதுமுக மாணவர்கள், சிரேஷ்ட மாணவர்களால், மாணவிகளால் பகிடி வதைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இரண்டொரு சம்பவங்களைத் தவிர, ஏனைய சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வராமல் விட்டுவிடுகின்றன. இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்கும் வகையில், பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் புது மாணவர்களுக்குத் தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்பட்டன. இராணுவத்தால் வழங்கப்பட்ட தலைமைத்துவ பயிற்சிகளுக்கும் கடும் எதிர்ப்புகள் கிளம்பின. கொஞ்சக் காலத்தில் அதுவும் காணாமல் போய்விட்டது.

13 வருடக் கனவை நனவாக்கிவிட்டு பல்கலைக்கழகங்களுக்கு நுழையும் புதிய மாணவர்களில் பலரும் தங்களுடைய கல்வி வாழ்க்கையைப் பாதியிலேயே கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு இந்த பகிடிவதை தள்ளிவிடுகின்றது. ஆகையால், புது மாணவர்களை ஏனைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையிலேயே நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதே உசிதமானது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மக்கள் தொடர்பின்றி அரசியல் செய்யலாமா?

மொஹமட் பாதுஷா

இருபது ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு, இப்போது ஐம்பது ரூபாயாக விலை அதிகரிக்கப்பட்டுள்ள ஒரு சிறிய பிஸ்கட் பக்கற்றில், 'நுகர்வோர் தொடர்பு கொள்வதற்கான ஒரு தொலைபேசி இலக்கம்' பொறிக்கப்பட்டுள்ளது. வீதியில் செல்லும் கனரக வாகனத்தின் பின்பக்கத்தில் 'எனது வாகனமோட்டுதல் எவ்வாறு?' என்ற வாசகத்துடன் தொடர்பிலக்கம் எழுதப்பட்டிருப்பதை கண்டிருக்கின்றோம்.

இவ்வாறு எல்லா சிறிய பெரிய விடயங்களிலும் வாடிக்கையாளர் அல்லது பொது மக்களின் அபிப்பிராயங்களைச் சேகரிப்பதற்கான ஒரு தொடர்பு வசதி செய்யப்பட்டிருப்பது வழக்கமாகும்.

ஆனால், அரசியல்வாதிகள் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களது பிரச்சினைகளை, கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக என்ன ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள்? என்ற கேள்விக்கு விடையென்ன?

யாரும் அரசியல்வாதியாகப் பிறப்பது கிடையாது. ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் குறிப்பிட்ட ஒரு நபரைக் காலைப் பிடித்துத் தேர்தல் களத்தில் தள்ளி விடுவதும் இல்லை. பிரதிநிதித்துவ அரசியலுக்குள் வருகின்ற அனைவரும் தாம் விரும்பியே எம்.பியாக, மாகாண சபை உறுப்பினராக, அமைச்சராக, முதலமைச்சராக ஆகின்றனர் என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக வேறுபல வெகுமதிகளும் உள்ளன. எம்.பி. என்ற மிகப் பெரிய கௌரவமும் பாராளுமன்ற வரப்பிரசாதங்களும் உள்ளன. இதுவெல்லாம் அவர்களது திறமைக்காகக் கொடுக்கப்படுபவை என்று கருத முடியாது.

ஏனெனில், இலங்கை பாராளுமன்றத்தில் பல கல்வியியலாளர்கள், துறைசார் வல்லுநர்கள் எம்.பிக்களாக பதவி வகித்தாலும் கூட, சமகாலத்தில் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் சித்தியடையாதவர்களும் உள்ளனர் என்ற தகவல் ஏற்கெனவே வெளியாகியிருந்தது. அதுமட்டுமன்றி, சண்டியர்களும் அரசியல் எடுபிடிகளும் ஒழுக்கமற்றவர்களும் கூட உள்ளனர் என்பதை நேரலையில் நாம் கண்டிருக்கின்றோம்.

ஆகவே, 'பாராளுமன்ற உறுப்பினர்' என்ற பொதுமைப்படுத்தலின் கீழேயே வரப்பிரசாதங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அத்துடன், பாராளுமன்றத்திற்கு வெளியேயுள்ள அறிவாளிகள், வல்லுநர்களை விடப் பல வகைகளில் விசேட சலுகைகளையும் கௌரவத்தையும் எம்.பிக்கள் அனுபவிக்கின்றனர். அதாவது, மக்கள் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் வந்திருக்கின்றார் என்பதற்காக, இவை வழங்கப்படுகின்றன. மக்களுக்கான சேவையை அவர் சரிவரச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த கொடுப்பனவுகளும் வரப்பிரசாதங்களும் மதிப்பும் வழங்கப்படுகின்றது என்பதை மறந்து விடக்கூடாது.

அந்த வகையில், பார்த்தால், இலங்கை பாராளுமன்றத்தில் உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட 196 எம்.பிக்கள் மட்டுமன்றி, மிக உன்னத நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட தேசியப் பட்டியல் முறைமை ஊடாக உள்ளே வந்த 29 எம்.பிக்களும் தமது பதவிக்கு உரித்தான தார்மீகப் பணிகளை எந்தளவுக்கு நிறைவேற்றுகின்றார்கள் என்பதை ஆராய வேண்டியுள்ளது.

ஒரு சில சிங்கள அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் முன்மாதிரியாக இருந்தாலும், பெரும்பாலானவர்கள் மிக மோசமான நிலையிலேயே உள்ளனர். மலையக அரசியல்வாதிகள் மக்களது அபிப்பிராயங்களைப் பெறுவதற்கான எத்தனங்களைச் செய்ததாகத் தெரியவில்லை. மக்களது பிரச்சினைகள் தமக்கு முழுமையாகத் தெரியும் என்றே அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

> **அநேக எம்.பிக்கள் சந்தர்ப்பங்களில் தொலைபேசிக்கு பதிலளிப்பதில்லை. அத்துடன், பிரச்சினைகளை உள்வாங்கிக் கொள்வதில்லை என்பதே சமூக மட்டத்தில் குறிப்பாக முஸ்லிம் மக்கள் தங்கள் அரசியல் பிரதிநிதிகள் மீது முன்வைக்கின்ற குற்றச்சாட்டாகும்...**

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் பிரச்சினைகளை பொதுவாக அறிவார்கள் என்றாலும் கூட தமிழ் மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளை தமது எம்.பியிடம் முன்வைப்பதற்கான ஏற்பாடுகள். அவர்களைச் சந்திப்பதற்கான அல்லது தொடர்பு கொள்வதற்கான வசதிகள் அண்மைக்காலத்தில் குறைவடைந்து வருவதாகவே தெரிகின்றது.

தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினை தீர்வும், உரிமையும், சுயாட்சியும் மட்டும்தான் பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இருப்பார்களாயின், அதிலிருந்து அவர்கள் வெளியில் வர வேண்டும். அவை நீண்டகால அபிலாசைகளாகும். அதற்கு மேலதிகமாக குறுங்கால நடைமுறைப் பிரச்சினைகளும் தமது மக்களுக்கு உள்ளன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை, முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி அறவே தெரியாது என்று கூறிவிட முடியாது. ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அதனை விளங்கி வைத்துள்ளனர். முஸ்லிம் எம்.பிக்கள், தலைவர்கள் மக்களைச் சந்திப்பதற்கான அல்லது மக்கள் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகள் பூச்சியமாகும்.

மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வது என்றால் மக்களுடனான தொடர்பு அவசியமாகின்றது. தங்களது அரசியல் போக்கு பற்றிய மக்கள் அபிப்பிராயங்களைச் சேகரிப்பதற்கும், புதிய பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கும் மக்கள் சந்திப்புக்கள் அவசியப்படுகின்றது. குறிப்பாக, எந்த இன மக்களாக இருந்தாலும் அவர்கள் தமது எம்.பியை தொடர்பு கொள்வதற்கான வழியொன்று இருக்க வேண்டும்.

இந்த விடயத்தில் எல்லாச் சமூகங்களைச் சேர்ந்த எம்.பிக்களும் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். சிங்கள அரசியல்வாதிகள் ஒரு சிலரும் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு சிலரும் ஒருகாலத்தில் இதற்கு விதிவிலக்காக இருந்ததாகக் கூறலாம். ஆனால், இப்போது எல்லோரும் மக்கள் தொடர்பு இல்லாமலேயே உள்ளனர்.

முஸ்லிம் எம்.பிக்கள் இதில் முதலிடம் வகிப்பதாகக் கூறலாம். முஸ்லிம் கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய அறிவு கொஞ்சம் இருக்கின்றது தான். ஆனால் அதுபற்றிய பிந்திய தகவல்கள் (அப்டேட்) கிடைப்பது குறைவு.

மக்களைச் சந்திப்பதற்கான பகிரங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு தலைவரை, எம்.பியை தொடர்பு கொள்வதற்காக ஒரு தொலைபேசி இலக்கத்தை எந்த முஸ்லிம் அரசியல்வாதியும் அறிவிக்கவில்லை. ஒருவேளை அவர்களை மக்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொள்ள முயன்றாலும் அந்த முயற்சி பதிலளிப்பதில்லை.

கணிசமான முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் தம்மைச் சுற்றி ஒரு ஜால்ராக் கூட்டத்தை வைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் பெரிய அறிவாளிகள் என்றும், அவர்கள்தான் 'மக்கள்' என்றும் அந்த எம்.பிக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள்தான் வெளியில் நடக்கின்ற விவகாரங்களை தமது விருப்பத்திற்கு ஏற்றாற்போல் எம்.பியின் கவனத்திற்கு கொண்டு செல்கின்றார்கள்.

சாதாரண வாக்காளன் ஒருவன், பொது மகன் ஒருவர் ஒரு எம்.பியிடம் தமது பிரச்சினையைக் கூற விரும்புவான். ஆனால், அவருடன் இருக்கின்ற கூட்டத்தினருக்கு எல்லாம் அதனைக் கூற விரும்பமாட்டான்.. ஆயினும், நேரடியாக எம்.பியை தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகள் உத்தியோகபூர்மாக அறிவிக்கப்படவில்லை என்பது கவலைக்குரியது.

மக்கள் தொடர்பு என்பது பரஸ்பரம் இருபக்க அனுகூலங்களைக் கொண்டது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

மக்களைத் தொடர்பு கொள்வதால் மக்களது பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்தால் அல்லது ஆறுதல் வழங்கினாலேயே அந்த பொது மகன் குறிப்பிட்ட அரசியல்வாதிக்கு ஒரு புள்ளியைப் போட்டுவிடுகின்றான். மறுபுறத்தில், தேர்தல் காலத்தில் இந்த தொடர்பு அந்த எம்.பி.க்கு வாக்காக மாறி உதவும்.

> **தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினை தீர்வும், உரிமையும், சுயாட்சியும் மட்டும்தான் பிரச்சினை என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இருப்பார்களாயின், அதிலிருந்து அவர்கள் வெளியில் வர வேண்டும். அவை நீண்டகால அபிலாசைகளாகும்...**

சாதாரண வாக்காளன் ஒருவன், பொது மகன் ஒருவர் ஒரு எம்.பியிடம் தமது பிரச்சினையைக் கூற விரும்புவான். ஆனால், அவருடன் இருக்கின்ற கூட்டத்தினருக்கு எல்லாம் அதனைக் கூற விரும்பமாட்டான். ஆயினும், நேரடியாக எம்.பியை தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகள் இதற்காகச் சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அதன் எம்.பிக்களும் வெகுசனத் தொடர்பு அதிகாரி, பிரதேச இணைப்பாளர், கட்சி அமைப்பாளர் என்று பல பதவிகளுக்கு ஆட்களை நியமித்துள்ளன. பல பதவிகளுக்குக் குறிப்பிட்ட எம்.பியின் சொந்தக்காரர், நண்பர் நியமிக்கப்பட்டிருப்பார். ஆயினும், மக்கள் தொடர்பு கேள்விக்குறியாகவே இருக்கும்.

அநேக எம்.பிக்கள் சந்தர்ப்பங்களில் தொலைபேசிக்கு பதிலளிப்பதில்லை. அத்துடன், பிரச்சினைகளை உள்வாங்கிக் கொள்வதில்லை என்பதே சமூக மட்டத்தில் குறிப்பாக முஸ்லிம் மக்கள் தங்கள் அரசியல் பிரதிநிதிகள் மீது முன்வைக்கின்ற குற்றச்சாட்டாகும். பிரச்சினையைத் தீர்ப்பது இரண்டாவது விடயமே.

நேரடியாக மக்கள் தொடர்பு இல்லாமல், தம்மைச் சுற்றியுள்ள கூட்டத்தில் தங்கியிருந்து, அவர்களை மட்டுமே நம்பி அரசியல் செய்த ஆட்சியாளர்களுக்கும் அசசியல்வாதிகளுக்கும் என்ன நடந்தது என்பதை வரலாறு அறியும். ஆகவே, இந்தப் போக்கை நமது எம்.பிகக்ள் மாற்றிக் கொள்ளவில்லையாயின், அதுவே இவர்களுக்கும் நடக்கும்.




## வாழ்வியல் தரிசனம்

எவருடனும் முரண்படுதல் இலகுவானது. சில சமயம் இதன் விளைவுகள் விசாலமானது. தேவையற்ற வாக்குவாதங்களால் எவரும் தங்களை மகா புத்திசாலிகள் எனக் கருதலாகாது.

பேசும்போது காரசாரம் மிகையானால் அதைத் துண்டித்த விலகுவதே புத்திசாலித்தனம். எங்களை நாங்களே புத்திசாலி என நிரூபிக்க எண்ணுவதே கோமாளித்தனம். சில சமயம் பிறரை வெல்லவைக்கப் பின்வாங்குவதுபோல் நடிப்பது நல்லது.


கணவன் உக்கிரமாகப் பேசினால், மனைவி விட்டுக்கொடுத்து விலக வேண்டும். அதேபோல் மனைவி சண்டைபோடும்போது, கணவன் சமயோசிதமாக அப்பால் நகருவதே புத்திசாலித்தனமானது. ஏட்டிக்குப்போட்டியான தர்க்கத்தால் பிரயோசனம் இல்லை.

எல்லோருக்கும் ரோசம், தன்மானம் இருக்கின்றது. அதில் நியாயமும் இருக்கலாம். சில தர்க்கங்களை நிரூபிக்க வேண்டும் என அடம்பிடித்தலாகாது. சமாதானம், சமரசம், மௌனம், அமைதியை உருவாக்கும் எவரையும் பகைத்தலாகாது. இதனால் எவரும் கோழைகள் கிடையாது.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# வெள்ளத்தால் சேதம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்டிருந்த வெள்ளத்தினால் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் ஆனைகட்டியவெளி, பலாச்சோலை ஆகிய பகுதிகளை இணைக்கும் பிரதான வீதி முற்றாகப் பாதிக்கப்பட்டு போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்குச் சேதமடைந்துள்ளது.


இந்நிலையில், ஆனைகட்டியவெளி பலாச்சோலை ஆகிய பகுதிகளை இணைக்கும் பிரதான பாலத்தின் இருமருங்கிலும் வெள்ளத்தினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதிக்குச் செல்லும் இலங்கை போக்குவரத்து சேவையும் கடந்த 20 நாட்களாகத் தடைப்பட்டுள்ளதாகவும், உடன் சம்மந்தப்பட்டவர்கள் வீதிக்கட்டமைப்பை புனரமைப்பு செய்துதருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– வ.சக்தி



## சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் ‘முதலாவது தவணை’ மதிப்பீட்டை வெளிப்படுத்தியது




சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) 2023 மார்ச் மாத்தில் ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்தின் முதல் கட்டமான ‘முதல் தவணை’யில் இலங்கையின் செயலாற்றுகை குறித்த தனது மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது.

‘விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாட்டின் கீழான முதல் மதிப்பாய்வு’ என்ற தலைப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீட்டில் உள்ள அனைத்து தகவல்களின் அடிப்படையிலும், வெரிட்டே ரிசர்ச் தனது ‘IMF கண்காணிப்பானை’ புதுப்பித்துள்ளது. 2023 நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 73 உறுதிமொழிகளில் 60ஐ இலங்கை ‘நிறைவேற்றியுள்ளது’ (சிறு தாமதத்துடன்).

மீதமுள்ள 13 உறுதி மொழிகளும்’ நிறைவேற்றப்படவில்லை’. குறித்த 13 உறுதிமொழிகளிலும்,
08 உறுதிமொழிகள் இரண்டாம் தவணைக்கு அல்லது இரண்டாம் மதிப்பாய்வு செய்யப்படும் காலப்பகுதிக்கு முன்கொண்டு செல்லப்பட்டுள்ளன.
05 உறுதிமொழிகள், மீள முடியாதபடி ‘நிறைவேற்றப்படவில்லை’ எனவே அவை முன்கொண்டு செல்லப்படமாட்டாது.

### இரண்டாம் தவணைக்கான மேலதிக உறுதிமொழிகள்

சர்வதேச நாணய நிதியம் நவம்பர் மாத இறுதிக்குப் பின்னர் வழங்கப்படவிருந்த 27உறுதிமொழிகளின் காலக்கெடுவை இப்போது மாற்றியமைத்துள்ளது அல்லது நீட்டித்துள்ளது. இவை IMF கண்காணிப்பானில்’நிலுவையில் உள்ளவை’ என வகைப் படுத்தப்பட்டுள்ளன, மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட்ட 08 உறுதிமொழிகளும் உள்ளன.

இந்த 35 (27+8) உறுதி மொழிகளுக்கு மேலதிகமாக, இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியம் 75 புதிய உறுதிமொழிகளை நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துள்ளன. எனவே, இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் 10 உறுதி மொழிகள் ‘நிலுவையில் உள்ள’ நிலையில், இரண்டாவது தவணை ஆரம்பமாகியுள்ளது.

### ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான உறுதிமொழிகள்

முதல் மதிப்பாய்வு ஜூன் மாதத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய உறுதிமொழிகளில் கவனம் செலுத்தியது. ஆயினும், கூட, ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான நான்கு உறுதிப்பாடுகள் நவம்பர் இறுதிக்குள் கூட ‘நிறைவேற்றப்படவில்லை’.

இவற்றில் முதன்மையானதாக
1) பொது கொள்முதல் மற்றும் வரி விலக்குகள் தொடர்பான இணைய வழி வெளிப்படைத்தன்மை மைதளத்தை ஆரம்பித்தல் மற்றும்
2) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர்களுக்கான வெளிப்படையான மற்றும் தகுதி அடிப்படையிலான தெரிவு செயல்முறையை நிறுவுதல் (CIABOC).

IMF கண்காணிப்பான் என்பது இலங்கையின் 17ஆவது சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் தொடக்கத்தில் இனங்காணப்பட்ட 100 உறுதி மொழிகளைக் கண்காணிக்கும் இலங்கையின் முதல் மற்றும் ஒரே தளமாகும். இதை வெரிட்டேரி சர்ச்சின் manthri.lk இணையத்தளத்தினூடாக பொதுமக்கள் அணுகலாம்.
https://manthri.lk/en/imf_tracker

## எனது அடுத்த கணவர் பச்சையாக இருக்கனும்



நடிகர் விஜயக்குமார்-மஞ்சுளா தம்பதியின் மகளான நடிகை வனிதா விஜயக்குமார் பல திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றவர்.

அவர், பிக்பாஸ், குக்வித் கோமாளி நிகழ்ச்சியில் பங்கேற்ற பிறகு மிகவும் பிரபலமடைந்தார். அதன் பின்னர் அவருக்கு பட வாய்ப்புகள் அதிகமாக குவிந்தது.

மேலும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் பீட்டர் பால் என்பவரை திருமணம் செய்த வீடியோ காட்சிகள் இணையத்தில் வேகமாக பரவியது. ஆனால், அதன் பின்னர் கருத்து வேறுபாட்டால் பிரிந்து விட்டார். கடந்த வருடம் பீட்டர் பால் உடல்நலக்குறைவால் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில், சமீபத்தில் ஒரு யூடியூப் சேனலுக்கு பேட்டி அளித்த வனிதா விஜயக்குமாரிடம், தொகுப்பாளர் அடுத்த திருமணம் குறித்து கேள்வி எழுப்பினார். இதுவரை சட்டப்படி இரண்டு முறை தான் திருமணம் செய்து இருப்பதாகவும், மூன்றாவது முறையும் செய்வேன் என கூறி இருக்கிறார்.

3ஆம் திருமணம் வெயிட்டிங் லிஸ்ட்ல இருக்கு என கூறிய அவரிடம், மாப்பிள்ளை கருப்பா இருக்கணுமா இல்லை சிவப்பா இருக்கணுமா என தொகுப்பாளர் கேட்டதற்கு, ‘பச்சையாக இருக்கனும் என கடுப்பானார். குபேரன் போல பச்சையாக இருக்க வேண்டும். அப்படி ஒருவரை தான் தேடிக்கொண்டிருக்கிறேன் என கோபத்துடன் பதிலளித்தார்.

எப்போது பேட்டி கொடுத்தாலும் திருமணம் பற்றிய கேள்விகளை தான் கேட்கிறார்கள் எனவும் அவர் கோபமாக பேசி இருக்கிறார்.



## ‘தலைவர் 171’ மாஸ் தகவல்!



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தற்போது ஞானவேல் இயக்கத்தில் உருவாகி வரும் ‘வேட்டையன்’ என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு கடப்பாவில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ரஜினிகாந்த் நடிப்பில், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், சன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில், அனிருத் இசையில் உருவாக இருக்கும் திரைப்படம் ‘தலைவர் 171’.

இந்த படத்தின் படப்பிடிப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த படத்திற்கான திரைக்கதை எழுதும் பணியில் லோகேஷ் கனகராஜ் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில், இந்த படத்தின் சில தகவல்கள் தற்போது கசிந்துள்ளது. அதன்படி, இந்த படத்தின் கதை இதுவரை ரஜினிகாந்த் நடிக்காத கதைக்களம் என்றும் அதேபோல், இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு வெளிநாட்டில் நடைபெற இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

முதல் கட்ட படப்பிடிப்பு எந்த நாட்டில் என்பதை இன்னும் ஒரு சில வாரங்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்த படத்தில் நடிக்கும் நட்சத்திரங்களின் தெரிவு ஒரு பக்கம் நடைபெற்று வருவதாகவும், இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.


## தலா 5 விருதுகளை அள்ளிய மூன்று திரைப்படங்கள்




69ஆவது பிலிம்பேர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் மூன்று பாலிவுட் திரைப்படங்கள் தலா 5 விருதுகளைப் பெற்று உள்ளன.
2024இல் சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த திரைக்கதை மற்றும் சிறந்த எடிட்டிங் ஆகிய ஐந்து பிரிவுகளில் ’12த் பெயில்’ என்ற திரைப்படம் வென்றுள்ளது.
அதேபோல் ரன்பீர் கபூர் நடித்த ‘அனிமல்’ திரைப்படமும் 5 விருதுகளை வென்று உள்ளது. இந்த படம் சிறந்த நடிகர், சிறந்த இசை, சிறந்த பாடகர், சிறந்த பின்னணி இசை மற்றும் சிறந்த சவுண்ட் டிசைன் ஆகிய விருதுகளை வென்றுள்ளது.
அதேபோல் விக்கி கௌசல் நடித்த ‘சாம் பஹத்தூர்’ திரைப்படமும் ஐந்து பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளது.
மேலும், ஷாருக்கான் நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவான ’ஜவான்’ திரைப்படம் சிறந்த சண்டை பயிற்சியாளர் மற்றும் சிறந்த VFX விருதுகளைப் பெற்றுள்ளது. ஸ்டண்ட் பயிற்சியாளர் பிரிவில் விருதுகளை வென்றவர்களில் அனல் அரசும் ஒருவர்.
அதேபோல் ஷாருக்கான் நடித்த ’பதான்’ திரைப்படம் சிறந்த பின்னணி பாடகி விருதை பெற்றுள்ளது. இந்த படத்தில் பாடல் பாடிய ஷில்பா ராவ் என்பவருக்கு இந்த விருது கிடைத்துள்ளது.



## அமலாபால் விளையாடிய வித்தியாசமான விளையாட்டு



நடிகை அமலாபால் தற்போது கர்ப்பமாக இருக்கும் நிலையில், தனது கணவருடன் விளையாடிய புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

நடிகை அமலா பால் தனது நீண்ட நாள் நண்பரான தேசாய் என்பவரை அண்மையில் திருமணம் செய்து கொண்ட நிலையில் அவர் கர்ப்பமானதாகக் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அறிவித்தார்.
மேலும், கர்ப்பமாக இருக்கும் சில புகைப்படங்களையும் அவர் வெளியிட்டார்.

இந்த நிலையில், தனது கணவருடன் சேர்ந்து அவர் தனக்குப் பிறக்கப் போவது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்ற விளையாட்டை விளையாடிய புகைப்படங்களைத் தனது இன்ஸ்டாவில் வெளியிட்டுள்ளார்.
இதனையடுத்து, தங்களுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்பதை நீங்களே கூறுங்கள் என்று ரசிகர்களிடம் கேட்டுள்ளார். சிலர் ஆண் குழந்தை என்றும் சிலர் பெண் குழந்தை என்றும் சிலர் இரட்டை குழந்தைகளை என்றும் இந்த பதிவுக்கு கமெண்ட்ஸ் பதிவு செய்து வருகின்றனர்.
மேலும் அமலாபால் பெண் குழந்தை பொம்மையின் அருகிலும் அவரது கணவர் ஆண் குழந்தையின் பொம்மையின் அருகிலும் நின்று எடுத்த புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகி வருகின்றன.

## விடுதலைக்கு தயாரான ‘சுமோ’

‘ஜப்பானில் இருந்து சென்னைக்கு வந்து மாட்டிக்கொள்ளும் சுமோ வீரரை, ஹீரோ சிவா எப்படி மீண்டும் ஜப்பானுக்கு அழைத்துச் செல்கிறார்’ என்கிற ஒரு வரி கதையை கொண்ட சுமோ திரைப்படம் 2020 பொங்கலுக்கு வெளியாகவிருந்தது.

ஐசரி கணேஷ் தயாரிப்பில் ‘மிர்ச்சி’ சிவா, பிரியா ஆனந்த், யோகி பாபு, விடிவி கணேஷ் எனப் பலர் நடிக்க ராஜீவ் மேனனின் ஒளிப்பதிவில் ‘சுமோ’ படத்தை எஸ்.பி.ஹோசிமின் இயக்கியிருந்தார்.

ஜப்பானின் இருந்து உண்மையான சுமோ விளையாட்டு வீரரையும் இந்த படத்தில் நடிக்க வைத்திருந்தார்கள். ஏற்கெனவே மிர்ச்சி விஜய், பிரியா ஆனந்த் இருவரின் நடிப்பில் வெளியான ‘வணக்கம் சென்னை’ திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. கொரோனாவால் படம் தள்ளிப்போன நிலையில், திரையரங்களில் வெளியிட பொறுமை காத்தது, படக்குழு. நான்கு வருடங்கள் ஆகியும் படத்தின் வெளியீடு குறித்து செய்தி வராமல் இருந்த நிலையில், தற்போது ‘சுமோ’ படத்தின் வெளியீட்டு வேலைகள் நடப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.



இஸ்ரேல்

# “ஹமாஸ் தாக்குதலுடன் ஐ.நா.வுக்கு தொடர்பு”



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் தொடங்கியது முதல் இதுவரை ஐ.நா. நிவாரணம் மற்றும் பணிகள் கழகத்தின் (UNRWA) பணியாளர்கள் 152 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், ஐ.நா. அமைப்பை சேர்ந்த 13 ஆயிரம் பேர் காசாவில் பணியாற்றி வருகின்றனர்.

இந் நிலையில், கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்தியதுடன், இந்த யு.என்.ஆர்.டபிள்யூ.ஏ. (UNRWA) பணியாளர்களுக்கு தொடர்பு உள்ளது என்று இஸ்ரேல் திடுக்கிடும் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளது.

இதில் எத்தனை பேர் வரை தொடர்பில் உள்ளனர் என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும், அமெரிக்கா மற்றும் ஐ.நா. பணியாளர்கள் உட்பட 12 பணியாளர்களின் விவரங்களை இஸ்ரேல் பகிர்ந்துள்ளது.

இதனை தொடர்ந்து, 12 பணியாளர்களில் 9 பணியாளர்களை பணி நீக்கம் செய்து, ஐ.நா. பொது செயலாளர் ஆன்டானியோ கட்டிரெஸ் அறிவித்துள்ளார். இவர்களில் ஒரு பணியாளர் உயிரிழந்து விட்டார். மற்ற 2 பேரின் அடையாளங்கள் இன்னும் தெளிவாக தெரியவரவில்லை.

இந்த கடுமையான குற்றச்சாட்டுகளின் மீது விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்டிரெஸ் உறுதி கூறியுள்ளார். இதுபற்றி விசாரணையும் நடந்து வருகிறது. என்றபோதும், இந்த அமைப்புக்கு நாடுகள் தொடர்ந்து நிதியுதவியை வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஏனெனில், 20 இலட்சம் காசா மக்களின் தினசரி வாழ்வுக்கு தேவையான முக்கிய ஆதரவை இந்த அமைப்பு வழங்கி வருகிறது.

அதனுடன், தற்போதுள்ள நிதியின் உதவியால் மொத்த காசா மக்கள் தொகைக்கு வேண்டிய அனைத்து தேவைகளையும் எதிர்வரும் பெப்ரவரியில் பூர்த்தி செய்வது என்பது இயலாத விடயம் என்று கட்டிரெஸ் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

ஆனால், இந்த அமைப்புக்கு எதிரான கடுமையான குற்றச்சாட்டுகளை அடுத்து, 9 நாடுகள் காசாவுக்கு வழங்கி வந்த நிதியுதவியை தற்காலிக அடிப்படையில் நிறுத்தி வைத்துள்ளன. அவற்றில் அமெரிக்காவும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து

## வீரசாகசம் வினையானது



உயரமான பொருட்கள் அல்லது கட்டிடங்களில் இருந்து பாராசூட் உதவியுடன் கீழே குதித்து சாதனை புரியும் “பேஸ் ஜம்பிங்” (BASE jumping) எனப்படும் விளையாட்டில் உயிரைப் பணயம் வைத்து ஈடுபடுவதும், அந்த வீடியோ காட்சிகளை தங்களின் சமூக வலைத்தள கணக்கில் வெளியிட்டு பயனர்களின் பாராட்டுகளை பெறுவதும் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், தாய்லாந்தின் பட்டயா (Pattaya) கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள ஒரு சொகுசு விடுதியின் 29 தள அபார்ட்மென்டிலிருந்து இங்கிலாந்து நாட்டை சேர்ந்த 33 வயதான நபர் பேஸ் ஜம்பிங் விளையாட்டில் ஈடுபட்டார்.

அந்த கட்டிடத்தின் மேல் மாடிக்குத் தனது நண்பர்களுடனும், பாராசூட் மற்றும் பிற தேவையான உபகரணங்களுடனும் சென்றார். அவரது சாகசத்தை நண்பர்கள் படம் பிடிக்க உடன் சென்றனர்.

அவர்கள் வீடியோ எடுக்க தொடங்கிய நிலையில், அந்த நபர் பாராசூட்டுடன் கீழே குதித்தார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர் கீழே குதித்து தரையை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது, அவரது பாராசூட் செயல்படவில்லை. இதனால், அவர் அங்கிருந்த ஒரு மரத்தில் விழுந்து, பின்னர் அதிலிருந்தும் தரையில் விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சீனா




சீனாவில் ஷாங்காய் நகரைச் சேர்ந்தவர் லியூ. வயோதிபப் பெண்ணான இவர், தனக்கு சொந்தமான பல கோடி மதிப்புள்ள சொத்துக்களைத் தனது 3 பிள்ளைகளுக்கும் பங்கீடும் வகையில் உயில் எழுதி வைத்துள்ளார்.

ஆனால், அந்த பெண் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டபோது, அவரது பிள்ளைகள் 3 பேரும் ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை. இது லியூவுக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஆவேசமடைந்த அவர், தனது உயிலை மாற்றி எழுதி சொத்துக்கள் அனைத்தையும் தான் வளர்க்கும் நாய் மற்றும் பூனைகள் மீது எழுதி வைத்துள்ளார்.

இதையறிந்த அவரது பிள்ளைகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# மீண்டும் முதல்வராக பதவியேற்றார் நிதிஷ் குமார்

பாராளுமன்ற தேர்தலில் தேசிய அளவில் பா.ஜ.க.வை தோற்கடிப்பதற்காக பீகார் முதல்வரும், ஐக்கிய ஜனதாதள கட்சியின் தலைவருமான நிதிஷ்குமார் எதிர்க்கட்சிகளை ஒன்றுதிரட்டி இந்தியா கூட்டணி என்ற 27 கட்சிகள் அடங்கிய கூட்டணியை உருவாக்கினார்.

தொடக்கத்தில் இருந்தே அந்தக் கூட்டணியில் ஒருமித்த உணர்வுடன் சுமூகமான சூழ்நிலை காணப்படவில்லை.

இதற்கிடையே, பீகாரில் காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைகளிலும் திருப்தி ஏற்படவில்லை. அதே சமயத்தில் தோழமைக் கட்சியான லல்லு பிரசாத் யாதவின் ராஷ்டீரிய ஜனதாதளம் கட்சியுடனும் நிதிஷ்குமாருக்கு மோதல் ஏற்பட்டது.

இதனால் ஞாயிற்றுக்கிழமை (28) பாட்னாவில் ஐக்கிய ஜனதாதள எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. அதில் நிதிஷ்குமார் கலந்துகொண்டு அரசியல் நிலவரங்கள் குறித்து விளக்கிப் பேசினார். அப்போது முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

நிதிஷ்குமாரை ஆதரிப்பதாக ஐக்கிய ஜனதாதளம் எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் தனித்தனியாக கையெழுத்திட்டு கடிதமும் வழங்கினர். இதற்கிடையே பாட்னாவில் பாரதிய ஜனதா கட்சி எம்.எல்.ஏக்கள் கூட்டமும் நடந்தது. 78 எம்.எல்.ஏக்களும் அதில் கலந்து கொண்டனர்.

அவர்களும் நிதிஷ்குமாரை முதல் மந்திரியாக்க ஆதரிப்பதாக எழுத்துப்பூர்வமாக தனித்தனி கடிதங்களில் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தனர். இதன்மூலம் ஆட்சி அமைப்பதற்குத் தேவையான எம்.எல்.ஏக்கள் பலத்தை நிதிஷ்குமார் பெற்றார். எம்.எல்.ஏக்கள் ஆதரவு கடிதங்களைப் பெற்றதைத் தொடர்ந்து நிதிஷ்குமார் ஐக்கிய ஜனதாதளம் மூத்த தலைவர்களுடன் ஆளுநர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆளுநரை ராஜேந்திர அர்லேகர் சந்தித்துப் பேசினார். அப்போது அவர் தற்போதைய முதல்வர் பதவியை ராஜினாமா செய்வதாகக் கூறி கடிதம் கொடுத்தார்.

இதனைத்தொடர்ந்து, பா.ஜ.க. ஆதரவுடன் ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ்குமார் ஞாயிற்றுக்கிழமை (28) பீகாரின் முதல்வராக மீண்டும் பதவியேற்றுக்கொண்டார். அவர் 9ஆவது முறையாக முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.

பாட்னாவில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லோகர், முதல்வரான நிதிஷ்குமாருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். பா.ஜ.கவை சேர்ந்த சாம்ராட் சவுதிரி, விஜய் சின்ஹா ஆகிய 2 பேரும் துணை முதல்வர்களாக பதவி யேற்றனர்.



கர்நாடகா

## அனுமன் கொடியை அகற்றியதால் 144 தடை உத்தரவு



கர்நாடக மாநிலம், மாண்டியா மாவட்டத்தில் உள்ள கெரகோடு கிராமத்தில் கடந்த வாரம் 108 அடி உயரத்தில் கொடிக்கம்பம் நிறுவப்பட்டு அதில் அனுமன் கொடியை ஏற்றியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

கொடிக்கம்பம் வைப்பதற்குக் கிராம பஞ்சாயத்து அனுமதி அளித்திருக்கிறது. ஆனால், தேசியக்கொடிக்குப் பதிலாக அனுமன் கொடி ஏற்றப்பட்டதாகப் புகார்கள் வரப்பெற்றதால், அனுமன் கொடியை அகற்றும்படி அதிகாரிகளைப் பஞ்சாயத்து நிர்வாகம் கேட்டுக்கொண்டது. இதையடுத்து அனுமன் கொடியை அகற்றுவதற்காக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை (28) சென்றனர். அப்போது கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கடைகளை அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பாஜக மற்றும் மதச்சார்பற்ற ஜனதா தளம், பஜ்ரங் தளம் தொண்டர்களும் போராட்டத்தில் இணைந்தனர். போராட்டத்தின்போது காங்கிரஸ் எம்.எல்.ஏ. ரவி குமாரின் பேனர்கள் சேதப்படுத்தப்பட்டன. இதனால் பதற்றம் உருவானது. இதையடுத்து அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

நிலைமை மோசமடைந்ததால் பொலிஸார் தடியடி நடத்திக் கூட்டத்தைக் கலைத்தனர். பின்னர் அனுமன் கொடியை அகற்றிவிட்டு தேசியக்கொடியை ஏற்றினர்.

கெரகோடு கிராமத்தில் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுவதால், 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



ஸ்பானிய லா லிகாத் தொடர்

# வலென்சியாவை வென்ற அத்லெட்டிகோ மட்ரிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற வலென்சியா உடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

அத்லெட்டிகோ சார்பாக சாமுவேல் லினோ, மெம்பிஸ் டிபே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 55 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஜிரோனா உள்ளது. 54 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் றியல் மட்ரிட்டும், 44 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோவும், நான்காமிடத்தில் பார்சிலோனாவும் காணப்படுகின்றன. இதில் ஜிரோனா ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில்

## இலங்கை கிரிக்கெட் சபையின் தடை நீக்கம்

இலங்கை கிரிக்கெட் சபை மீதான இடைக்காலத் தடையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சர்வதேச கிரிக்கெட் சபை நீக்கியுள்ளது.

அரசாங்கத் தலையீடு காரணமாக கடந்தாண்டு நவம்பரில் இலங்கை கிரிக்கெட் சபை மீது இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில் மோசமான பெறுபேறுகளைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் சபையை விளையாட்டமைச்சு நீக்கியிருந்தது. இது பின்னர் நீதிமன்றத்தால் இல்லாமல் ஆக்கச் செய்யப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:

# சம்பியனான சின்னர்



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் நான்காம் நிலை வீரரான ஜன்னிக் சின்னர் சம்பியனானார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டி யில்மூன்றாம் நிலை வீரரான டனில் மெட்வெடெவ்வை எதிர்கொண்ட இத்தாலியின் சின்னர், 3-6, 3-6, 6-4, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வென்று சம்பியனானார்.

தனது அரையிறுதிப் போட்டியில் முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச்சை 6-1, 6-2, 6-7 (6-8), 6-3 என்ற செட் கணக்கில் சின்னரும், தனது அரையிறுதிப் போட்டியில், 6ஆம் நிலை வீரரான அலெக்ஸான்டர் ஸ்வ்வேர்வ்வை 5-7, 3-6, 7-6 (7-4), 7-6 (7-5), 6-3 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் மெட்வெடெவ்வும் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.

இதேவேளை, பெண்களில் தற்போதைய 7ஆம் நிலைவீராங்கனையான குயின்வென் ஸெங்கை 6-3, 6-2 என்ற நேர் செட்களில் வென்று 2ஆம் நிலை வீராங்கனையான அர்யானா சபலெங்கா சம்பியனாகியிருந்தார்.



இத்தாலிய சீரி ஏ தொடர்

# சமநிலையில் லேஸியோ நாப்போலி போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், லேஸியோவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை நடப்புச் சம்பியன்களான நாப்போலி 0-0 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 54 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் இன்டர் மிலன் காணப்படுகின்றது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஜுவென்டஸும், 46 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஏ.சி மிலனும், 36 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லாண்டாவும் காணப்படுகின்றது. இதில் இன்டர் மிலனும், அத்லாண்டாவும் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 30 ஜனவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.